பக்கங்கள்: 08

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 16 ஞாயிற்றுக்கிழமை 01.12.2024 கதிர் 024

# இனவாத கருத்துக்களை சீனா தெரிவிப்பது ஆரோக்கியமல்ல

## கஜேந்திரகுமார் காட்டம்

பூகோள அரசியல் போட்டி காரணமாக சீனா தமது ஆதிக்கத்தை அதிகரிக்கும் நோக்கில் இனவாதக் கருத்துக்களை தெரிவிப்பது ஆரோக்கியமான விடயமல்ல. சீனத் தூதர் தனது பதவிக்குப் பொருத்தமில்லாத விடயங்களில் தலையிடக்கூடாது.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அண்மையில் சீனத் தூதர் யாழ்ப்பாணம் வந்திருந்தபோது, தமிழ் மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்ததன் மூலம் இரண்டு தரப்புக்களும் ஒன்றிணைந்து செயற்பட ஆரம்பித்துவிட்டன எனக் கருத்துக் கூறியிருந்தார்.

இந்தக் கருத்தை எமது கட்சி கண்டிக்கிறது. இலங்கையில் உள்ள வெளிநாட்டுத் தூதுவர் ஒருவர் இவ்வாறு கருத்து கூறுவது நாகரிகமான செயல் அல்ல என்பதையும் சுட்டிக்காட்டுகிறது.

தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் தேசிய மக்கள் சக்திக்கு தமிழ் மக்கள் ஆதரவு வழங்கிவிட்டார்கள் என ஒருபோதும் கூறமுடியாது. தேசிய மக்கள் சக்திக்கு ☞ 2

## இது ரகசியம் அல்ல!

தேர்தல் தோல்வியைத் தொடர்ந்து தமிழ் அரசுக் கட்சியின் முதுகில் சவாரி விட "தமிழர்களின் ஒற்றுமை" என்ற போலிக் கோசத்தின் கீழ் பல கட்சிகள் தயாராகி வருகின்றன என்று ஏற்கனவே எனது இந்தப் பத்தியில் சொல்லியிருக்கின்றேன். இப்போது அது தொடர்பான காட்சிகள் கட்டவிழ்ந்து வருகின்றன.

எப்போதும் தான் சார்ந்திருக்கும் அணியினருக்கு விசுவாசமாக நடந்துகொள்வதை ☞ 2

## எச்சரிக்கை நீடிப்பு

மகாவலி கங்கை ஆற்றுப்படுகை மற்றும் தெதுரு ஓயா ஆற்றுப்படுகைக்கு வழங்கப்பட்டுள்ள வெள்ள அபாய எச்சரிக்கை அறிவிப்பை அடுத்த 24 மணித்தியாலங்களுக்கு நீட்டிக்க நீர்ப்பாசன திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் காரணமாக அப்பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களும், அப்பகுதி வழியாக வீதிகளில் ☞ 2

## பெற்றோல் 2 ரூ. குறைப்பு டீசல் 3 ரூபாய் அதிகரிப்பு

இலங்கை பெட்ரோலிய கூட்டுத்தாபனம் இன்று நள்ளிரவு முதல் எரிபொருள் விலைகளில் திருத்தங்கள் செய்யப்படுவதாக அறிவித்துள்ளது.

அதன்படி, இலங்கை கனியவளக் கூட்டுத்தாபனம், ஒக்டேன் 92 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலையை 2 ரூபாவினால் குறைத்து 309 ரூபாவாக நிர்ணயித்துள்ளது.

ஒட்டோ டீசல் லீற்றர் ஒன்றின் விலை 3 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன்படி, அதன் புதிய விலை 286 ரூபாவாகும்.

மண்ணெண்ணெய்யின் ☞ 2


## மீன்பிடித்துறை அமைச்சர் கொட்டடியில் கள ஆய்வு



மீன்பிடித்துறை அமைச்சர் சந்திரசேகரம் நேற்று மாலை பருத்தித்துறை கொட்டடி பகுதியில் கள ஆய்வில் ஈடுபட்டார். அந்தப் பகுதி மீனவர்களின் அழைப்பின் பேரில் அவர் அங்கு வருகை தந்திருந்தார். மீனவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது இந்திய மீனவர்களது எல்லை தாண்டிய மீன்பிடி நடவடிக்கை தொடர்ந்து வருகின்றமை காரணமாக வடக்கு மீனவர்கள் பெரும் இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் எனவும் அதனைத் தடுத்து நிறுத்த இலங்கை கடற்படையினர் மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினர்.

அத்துடன் சுருக்கு வலை உள்ளிட்ட தடைசெய்யப்பட்ட தொழில்களையும் முற்றாகத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதே ☞ 7



## 4 லட்சம் ஏக்கர் வயல்கள் பெருவெள்ளத்தில் மூழ்கின

கடும் மழை காரணமாக சுமார் 390,000 ஏக்கர் விளைநிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாக விவசாய மற்றும் கமநல காப்புறுதி சபை தெரிவித்துள்ளது.

பொலன்னறுவை மாவட்டத்தில் நீரில் மூழ்கிய விளைநிலங்களுக்கான சேத மதிப்பீடு நாளை மறுதினம் ஆரம்பமாகும் என்று சபையின் தலைவர் பிரேமசிறி ஜாசிங்க ஆராச்சி தெரிவித்துள்ளார்.

அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் அதிகளவான விவசாய நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளன. ஒட்டுமொத்தமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கணிசமான விவசாய நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

20 இலட்சம் ரூபா வரை இழப்பீடு வழங்கப்படும். வெள்ளத்தால் சேதமடைந்த நெல், சோளம், உருளைக்கிழங்கு, சோயாபீன்ஸ், வெங்காயம், மிளகாய் போன்ற பயிர்களுக்கு ஏக்கருக்கு 40,000 ரூபா வழங்கப்படும்.

இந்த இழப்பீடு வழங்க அரசு ஏற்கனவே 1 பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்வதற்கு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

இதேவேளை, வெள்ளத்தினால் சேதமடைந்த நெற்பயிர்களை மீள் நடவு செய்வதற்கான விசேட வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இந்த முயற்சிக்கு உறுதுணையாக ☞ 2

## கட்சி மறுசீரமைப்புகளில் ஐ.ம.ச, பெரமுன தீவிரம்

பொதுத் தேர்தல் தோல்வியைத் தொடர்ந்து அடுத்துவரும் தேர்தல்களை எதிர்கொள்ளும் வகையில் தமது கட்சிகளை மறுசீரமைக்கும் பணிகளை எதிர்க் கட்சிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

எதிர்வரும் தேர்தலை எதிர்கொள்ள கட்சிப் பொறிமுறையை பலப்படுத்த வேண்டும் என்பதால் எதிர்க்கட்சிகள் அனைத்தும் மறுசீரமைக்கப்பட வேண்டும் என்ற கருத்துக்கள் கட்சிகளுக்குள் ☞ 2

## அரச நிறுவன பதவிகளுக்கு தகுதியற்றவர்கள் நியமனம்

### ஆயுர்வேத மருத்துவ அதிகாரிகள் அமைப்பு போர்க்கொடி

ஆயுர்வேத திணைக்களம் உள்ளிட்ட அரச நிறுவனங்களின் உயர்பதவிகளுக்குத் தகுதியற்ற மற்றும் தங்களுக்கு நெருக்கமானவர்களை தற்போதைய ஆளும்தரப்பு நியமித்துள்ளதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த இலங்கை ஆயுர்வேத மருத்துவ அதிகாரிகளின் ஒன்றிணைந்த அமைப்பின் தலைவர் வைத்தியர் விமுக்தி டி சொய்ஸா இதனைத் தெரிவித்தார்.

தகுதியற்ற மற்றும் தங்களுக்கு நெருக்கமானவர்களை உயர் பதவிகளுக்கு நியமிக்கும் ☞ 7

## அமைச்சரவையின் கூட்டு நம்பிக்கையை முன்னாள் அமைச்சர் ஹெகலிய மீறினார்

### நீதிமன்றில் சட்டமா அதிபர் அறிக்கை

தரமற்ற தடுப்பூசிகளை கொள்வனவு செய்தமைக்காக தவறான தகவல்கள் அடங்கிய அமைச்சரவை பத்திரத்தை சமர்ப்பித்து முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல அமைச்சரவையின் கூட்டு நம்பிக்கையை மீறியுள்ளதாக சட்டமா அதிபர் மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றில் அறிவித்தார்.

இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு அப்போதைய அமைச்சரவையின் அமைச்சர்கள் வழங்கிய வாக்குமூலங்களின் ஊடாக இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் சார்பில் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் லக்மினி கிரிஹாகம நீதிமன்றில் தெரிவித்தார்.

தரமற்ற தடுப்பூசிகளை கொள்வனவு செய்வது தொடர்பான விசாரணை நேற்று மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றில் மீள அழைக்கப்பட்டது.

இதன்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இந்த வழக்கின் முதலாவது சந்தேக நபர் சுதத் ஜானக பெர்னாண்டோ மற்றும் பிணையில் ☞ 2

## இடரினால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 16 ஆகியது

### 4 லட்சத்து 65 ஆயிரம் பேர் பாதிப்பு

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக நேற்று நண்பகல் 12 மணி வரையான காலப்பகுதியில் 24 மாவட்டங்களில் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளதாகவும் இடர்களில் சிக்கி இதுவரை 16 பேர் உயிரிழந்துள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

மழை, வெள்ளம் போன்ற ☞ 7

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

நினைத்துக்கூடப் பார்க்காத ரெலோ, இந்தத் தேர்தல் தோல்விக்குப் பின்னர் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியைக் கழற்றி விட்டுவிட்டு அடுத்த தேர்தலில் தமிழ் அரசுக் கட்சியுடன் ஒட்டிக்கொள்வதற்கான ஏற்பாடுகளில் மும்முரமாக இருக்கின்றது.

இந்த விடயம் தொடர்பில் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருடன் மிக நெருக்கமான பேச்சுக்கள் நடத்தப்பட்டு வாய்மொழி மூல இணக்கங்களும் ஏற்கப்பட்டுள்ளன. அந்த நாடாளுமன்ற உறுப்பினர் ரெலோவை இணைத்துக்கொள்வதற்கு இணங்கினாலும் கட்சி அவரது கருத்தை ஏற்றுக்கொள்ளுமா என்பது கேள்விதான். அல்லது கட்சியை இணக்க வைக்குமளவிற்கு தலைமைத்துவ ஆளுமை அவருக்கு இருக்கிறதா என்பதும் கேள்விதான்.

இருந்தாலும், பொதுத் தேர்தலுக்கு முன்னர் தமிழ் அரசுக் கட்சியுடன் வீட்டுச் சின்னத்தில் வந்து இணைந்துகொள்ளுங்கள் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பழைய பங்காளிகளுக்கு கட்சி விடுத்த அழைப்பை அடிப்படையாகக் கொண்டு தமிழ் அரசுக் கட்சியுடன் ரெலோ ஒட்டிக்கொள்ளும் முயற்சிகளை முன்னெடுக்கலாம் என்று இரு தரப்பினரும் திட்டம் போட்டுள்ளனர். வவுனியாவில் நடந்த தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட அந்த முடிவை, இரு கரங்களை நீட்டி வரவேற்கின்றோம் என்று இரு கரங்களையும் நீட்டியபடியே சுமந்திரன் அறிவித்திருந்தார். இப்போது அவரே அப்படி இரு கரங்களையும் நீட்டி வரவேற்றதால் ரெலோ தமிழ் அரசுடன் ஒட்டுவதை அவர் எதிர்க்கமுடியாது என்று தாங்களாகவே ஒரு கணக்குப் பண்ணிக்கொண்டு இவர்கள் காய் நகர்த்துகிறார்கள்.

ஆனால், அந்த அழைப்பை அப்போதே நிராகரித்து, கூட்டமைப்பு வேண்டும் என்றால் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்குத்தான் தமிழ் அரசுக் கட்சி வரவேண்டும் என்று வீர வசனம் எல்லாம் பேசிவிட்டு இப்போது சுமந்திரன் இரு கரங்களையும் அகல விரித்து வரவேற்றார் என்றுகூறிக்கொண்டுமீண்டும்தமிழ்அரசின் முதுகில் சவாரி செய்ய ரெலோ முயல்வது அந்தக் கட்சித் தலைவர்களை நகைச்சுவை நாயகர்களின் உச்சியில் கொண்டு சென்று வைக்கிறது.

ரெலோ இப்படி தங்களைக் கழற்றிவிட்டு தமிழ் அரசுடன் ஒட்டிக்கொள்ள பின்கதவு வேலைகளைப் பார்த்து வருகின்றது என்பது ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணித் தலைவர்களுக்கும் தெரிந்தே இருக்கின்றது. அண்மையில் இந்த விவகாரம் புளொட் உயர் மட்டத்தில் பேசப்பட்டும் இருக்கின்றது.

ரெலோ அப்படிப் போனாலும் புளொட் அப்படி மீண்டும்ஒருபோதும்தமிழ்அரசுக்கட்சியுடன் அதன் வீட்டுச் சின்னத்தில் போட்டியிடாது என்று சித்தார்த்தன் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கின்றார். மீண்டுத் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பாகச்செயற்படவேண்டும் என்றால் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி போன்று கூட்டமைப்பையும் பதிவு செய்து தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகள் அனைத்தையும் அதற்குள் உள்வாங்கி சம மதிப்புக்கொடுத்துச்செயற்படுவதாக இருந்தால் மட்டுமே புளொட் அதற்கு இணங்கி வரும் என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

ஜனநாயகத்தமிழ்த்தேசியக்கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஈபிஆர்எல்எவ் சுரேஸ் பிரேமச்சந்திரன்மற்றும்சிறீகாந்தாஆகியோரும் இதே நிலைப்பாட்டிலேயே இருக்கின்றனர். ரெலோ இப்படித் அவர்களுக்குத் துரோகம் செய்துவிட்டு தமிழ் அரசுடன் தேனிலவு கொண்டாடத் தயாராகி வருவது குறித்து அவர்கள் பெரிதாக அலட்டிக்கொள்ளவும் இல்லை. காரணம், ரெலோவுக்கு அது கைவந்த கலை என்பது அவர்களுக்கு நன்கு தெரியும் புரியும்.

ஒருபுறத்தில் தமிழ் அரசுடன் ரெலோ இப்படி பின்கதவுப் பேச்சுக்களை நடத்தினால். மறுபுறத்தில் விக்னேஸ்வரன் ஐயாவின் தமிழ்மக்கள்கூட்டணியின்மணிவண்ணன் தரப்பும் தேர்தல் தோல்வியைத் தொடர்ந்து, முன்னர் தாம் கைவசம் வைத்திருந்த உள்ளூராட்சி சபைகளையாவது மீண்டும் பிடித்துதமது அரசியலைத்தக்கவைப்பதற்காக தமிழ் அரசுக் கட்சியின் முதுகில் சவாரி செய்வதற்கான பின்கதவு முயற்சிகளில் இறங்கிவிட்டார்கள் என்று கேள்வி. ரெலோ ஒரு பக்கத்தால் போனால் இவர்கள் மறுபக்கத்தால் போகிறார்கள். அதனால் தமிழ் அரசுக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருடன் இவர்கள் பேச்சு நடத்தியுள்ளனர். அவர் பிடிகொடுத்துப் பேசவில்லை என்று கேள்வி.

மணிவண்ணன் மட்டுமல்ல ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் அரசுக் கட்சிக்கு எதிராக தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பின் வேட்பாளர் அரியநேத்திரனை ஆதரித்து பரப்புரை செய்து, பொதுத் தேர்தலிலும் தமிழ் அரசுக் கட்சிக்கு எதிராக வேலை செய்து ஜனநாயகத் தமிழ் அரசுக் கூட்டமைப்பு என்று சுயேச்சையாகக் களமிறங்கிய சட்டத்தரணி தவராசா மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்சரவணபவான்கூட்டோ-டுசேர்ந்து நிற்பதாகக் காட்டிக்கொண்டு திரைமறையில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் வேட்பாளரானதனதுமாமியாருக்காகத்தேர்தல் பரப்புரையில் மும்முரமாக ஈடுபட்ட மாவை சேனாதிராசாவின் மகன் கலையமுதனும் இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருடன் பின்கதவுச் சந்திப்புக்களில் இறங்கித் தனக்கும் தனது தந்தைக்கும் கட்சியில் கதவடைத்து விடாதீர்கள் என்று சமரசப் பேச்சுக்களில் ஈடுபடுகிறார் என்றும் தகவல்.

உள்ளூராட்சிசபைத்தேர்தலுக்குமுன்பாக ஒவ்வொருவரும் தமது அரசியலைத் தக்க வைப்பதற்கான முயற்சியில் இருக்கிறார்களே தவிர, தமிழ் மக்களுக்கான அரசியல் பற்றி அவர்களுக்குளந்தக்கரிசனையும்இருப்பதாகத் தெரியவில்லை.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## இனவாத....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். தேர்தல்தொகுதியில்மூன்றுஆசனங்கள் கிடைக்கப்பெற்றது. மூன்றாவது ஆசனம் சுயேச்சை குழுக்கள் திட்டமிட்ட முறையில் தமிழ் மக்களின் வாக்குகளை பிரித்ததால் கிடைத்தது.

இம்முறை இடம்பெற்ற நாடாளுமன்ற தேர்தலில் சுமார் ஒன்றரை இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

கடந்த நாடாளுமன்ற தேர்தலில் தெற்கை பிரதிநிதித்துவப்டுத்தி களமிறங்கிய அங்கஜன், டக்ளஸ் போன்றோர் பெற்ற வாக்குகளைவிட இம்முறை தேசிய மக்கள் சக்தி சுமார் 15,000 வாக்குகள் குறைவாகவே பெற்றுள்ளது. தெற்குக்கட்சிகளுக்குதொடர்ச்சியாகவாக்களிக்கும் பெரும் பகுதியினர் அங்கஜன், டக்ளஸை நிராகரித்துதேசியமக்கள்சக்திக்குவாக்களித்துள்ளனர் என்பதே உண்மையான விடயம்.

இவற்றை அறியாத சீனத் தூதுவர் தமிழ் மக்கள் தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயற்பட தயாராகிவிட்டனர் என்ற கருத்து தமிழ் மக்களை வேண்டுமென்றே தவறான பாதையில் இட்டுச் செல்வதாக இருக்கின்றது.

தமிழ் மக்கள் நீண்ட காலமாக தமிழ் தேசியம் சார்ந்த கட்சிகளுக்கு தமது ஆதரவைக் கொடுத்துவரும் நிலையில் அவர்களின் கோரிக்கை தொடர்பில் சீனத் தூதவர் ஆளும்தரப்புக்கு எடுத்துக் கூறவேண்டும். அதை விடுத்து, பூகோள அரசியல் போட்டி காரணமாக சீனா தமது ஆதிக்கத்தைஅதிகரிக்கும்நோக்கில்இனவாதக் கருத்துக்களை தெரிவிப்பது ஆரோக்கியமான விடயமல்ல.

உலக வல்லரசில் ஒன்றான சீனாவின் தூதுவர் தனது பதவிக்குப் பொருத்தமில்லாத விடயங்களில் தலையிடுவதையும் தமிழ் மக்கள் மத்தியில் இனவாத கருத்துக்களை விதைப்பதையும் தவிர்த்துக்கொள்ள வேண்டும் - என்றார்.

## கட்சி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலியுறுத்தப்பட்டதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மறுசீரமைப்புக்குமுன்பாகதமதுகட்சிகளின் குறைபாடுகளை ஆய்வு செய்வதற்காக சிறப்பு குழுக்களை நியமிக்கவும் அந்தந்த கட்சி தலைவர்கள் உத்தேசித்துள்ளனர்.

ஶ்ரீலங்கா பொது ஜன பெரமுன கட்சியில் மேற்கொள்ளப்படவுள்ள மாற்றங்கள் தொடர்பில்பொதுமக்களின்கருத்துக்களையும் பெற்றுக்கொள்ளஎதிர்பார்த்துள்ளதாககட்சியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். விரைவில் கட்சித் தலைமை உட்பட மறுசீரமைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் மறுசீரமைப்பு பணிகள் மிக விரைவில் தொடங்கும் என்று கட்சிப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். எதிர்வரும் தேர்தலுக்கு முகங்கொடுக்க கட்சியின் பொறிமுறையை வலுப்படுத்துவது மிகவும் அவசியமானது என்றும் அவர் கூறினார்.

கட்சிச் சீரமைப்பு நடவடிக்கைகளில் இளைஞர்களுக்கு அதிக வாய்ப்பு வழங்கவும் கட்சித் தலைவர்கள் தீர்மானித்துள்ளனர் என்று கூறப்படுகின்றது.

## எச்சரிக்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயணிக்கும் வாகன சாரதிகளும் மிகுந்த அவதானத்துடன்செயற்படுமாறுதிணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது.

இதேவேளை, ஹெடஓயாவை அண்மித்த பகுதிகளில் விடுக்கப்பட்ட வெள்ள அபாய எச்சரிக்கைஅறிவிப்பைநீக்குவதற்குநீர்ப்பாசன திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

நாடளாவிய ரீதியில் மழைவீழ்ச்சி நிலைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் மற்றும் ஆறுகளின் நீர் மட்டங்களில் ஏற்படும் மாற்றங்கள் தொடர்பில் நீர்ப்பாசனத் திணைக்களம்தொடர்ந்துஅவதானம்செலுத்தி வருகின்றது.

இதன் காரணமாக வெள்ள நிலைமை ஏற்பட்டால், முன்னறிவிப்பு வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகநீர்ப்பாசனதிணைக்களம் தனது அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளது.

## 4 லட்சம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரிகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் விவசாயம், கமநலஅபிவிருத்திஆணையாளர் நாயகம் ரோஹன ராஜபக்ஷ தெரிவித்தார்.

கால்நடை வளர்ப்பு மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் செயலாளர் டி.பி. பாதிக்கப்பட்ட வயல்களில் மீள் நடவு செய்வதற்கு விதை நெல்லை வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக விக்கிரமசிங்க தெரிவித்தார்.

## பெற்றோல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விலை 5 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு அதன் புதிய விலை 188 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக இலங்கை கனியவளக்கூட்டுத்தாபனம்தெரிவித்துள்ளது.

ஒக்டேன் 95 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 371 ரூபாவாகவும், சுப்பர் டீசல்லீற்றர்ஒன்றின்விலை313ரூபாவாகவும் மாற்றமின்றி விற்பனை செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் விலைகளுக்கு நிகராக தமதுநிறுவனத்தின்எரிபொருள்விலைகளும் திருத்தப்பட்டுள்ளதாக சினோபெக் நிறுவனம் அறிவித்துள்ளது.

புதிய விலை நிலவரத்தின் படி, ஒக்டேன் 92ரக பெற்றோல் - ஒரு லீற்றர் 2 ரூபா குறைக்கப்பட்டுள்ள நிலையில் புதிய விலை 309 ரூபாவாகும். ஒக்டேன் 95 ரக பெற்றோலின் விலையில் மாற்றமில்லை.

ஒட்டோ டீசல் ஒரு லீற்றர் 3 ரூபாவினால் அதிகரித்து புதிய விலை 286 ரூபாவாகவும் சுப்பர் டீசல் விலையில் மாற்றமில்லை.

மண்ணெண்ணெய் ஒரு லீற்றர் 5 ரூபாவினால் அதிகரித்து புதிய விலை 188 ரூபாவாகும்.

## அமைச்சரவையின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியில்உள்ளமுன்னாள்சுகாதாரஅமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல உட்படலான 10 சந்தேகநபர்களும்நீதிமன்றில்முன்னிலையாகி இருந்தனர்.



காலைக்கதிர் Kalaikkathir

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரஜீவன் எம்.பி. உதவி



கிளிநொச்சி பாரதிபுரம், பொன்நகர், இரத்தினபுரம் ஆகிய பிரதேசங்களில் சாவகச்சேரி இந்துக்கல்லூரி க.பொ.த. சாதாரண தரம் 1983 புலம்பெயர் மாணவர்களின் நிதி அனுசரணையில் தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லயன் ஜெ.ரஜீவனின் ஒழுங்கமைப்பில் யாழ்ப்பாணம் சிற்றி லயன்ஸ் கழகத்தின் ஊடாக 150 குடும்பங்களுக்கு அத்தியாவசிய பொருள்கள், சிறுவர்களுக்கு பிஸ்கற் மற்றும் மதிய உணவுப் பொதிகள் என்பன வழங்கப்பட்டன.





இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் லயன் ஜெ.ரஜீவன், சாவகச்சேரி லயன்ஸ் கழக சிரேஷ்ட உறுப்பினர் லயன் ஆர்.ஜெயபாலன், யாழ்ப்பாணம் சிற்றி லயன்ஸ் கழக சிரேஷ்ட உறுப்பினர் லயன் மயூரிக்கா ரஜீவன் ஆகியோர் கலந்துகொண்டு பொருள்களை வழங்கி வைத்தனர்.

# ரூ 40 லட்சம் பெறுமதியான மஞ்சள் கொழும்பில் மீட்பு

கொழும்பு 15 இல் உள்ள தனியார்களஞ்சியசாலைஒன்றில் மறைத்துவைக்கப்பட்டிருந்த765 கிலோகிராம் மஞ்சள் நுகர்வோர் விவகார அதிகார சபையின் புலனாய்வு அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டது.

நுகர்வோர் விவகார அதிகார சபையின் புலனாய்வு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் இந்த தொகைகைப்பற்றப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட மஞ்சள் தொகையின் பெறுமதி சுமார் 40 லட்சம் ரூபா என நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

பற்றுச்சீட்டு இல்லாமல், எந்தத் தகவலும் குறிப்பிடப்படாமல் சந்தையில்விற்பனைசெய்வதற்கு தயாராக இருந்த மஞ்சள் தொகையே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்த மஞ்சள் தொகை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

# முல்லையில் தீ விபத்து முதியவர் உயிரிழப்பு

முல்லைத்தீவு - சிலாவத்துறை பகுதியில் தீ விபத்தில் சிக்கி முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார் டிக முல்லைத்தீவு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த தீ விபத்து வெள்ளிக்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் முல்லைத்தீவு - சிலாவத்துறை பகுதியைச் சேர்ந்த 75 வயதுடையவர் ஆவார்.

உயிரிழந்த முதியவர் தனது மகனின் வீட்டுக்கு அருகிலுள்ள மற்றுமொரு வீட்டில் தனியாக வசித்து வந்தார்.

இந்நிலையில், கடும் மழையால் ஏற்பட்ட குளிரை எதிர்கொள்ளும் வகையில் வெப்பமூட்டுவதற்காக வீட்டுக்குள் தீ பற்ற வைத்துள்ளார்.

இதன்போது தீ பரவியதால் இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

முதியவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக மாஞ்சோலை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கல்குடா பொலிஸ் பிரிவில் பலவிடங்களில் திருட்டுகள்

கல்குடா பொலிஸ் பிரிவில் வெள;வேறு இடங்களில் வியாழக்கிழமை இரவு திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என கல்குடா பொலிஸார் தெரிவித்தனர்.

பட்டியடிச்சேனை மற்றும் பேத்தாழை ஆகிய கிராமசேவகர் பிரிவுகளில் இந்தச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. வீட்டின் கதவுகள், ஜன்னல் பகுதிகளை உடைத்து பெறுமதிவாய்ந்த வீட்டு உபகரணங்களை களவாடிச் சென் றுள்ளனர்.

திருடர்களைபிடிப்பதற்காக மட்டக்களப்புகுற்றதடயவியல் பிரிவு பொலிஸார் சம்பவ இடத்திற்குவரவழைக்கப்பட்டு மோப்ப சக்தி நாயின் உதவியுடன் விசாரணைகளை மேற்கொண்டு வரு கினறனர். திருடர்களிடமிருந்து தங்களது உடைமைகளை பாதுகாத்துக் கொள்வதற்கு பிரதேச மக்கள் அவதானத்துடன்இருக்குமாறும் பொலிஸார் பிரதேச மக்களை கேட்டுள்ளனர்.

தற்போது மாவட்டத்தில் நிலவும் சீரற்ற வானிலையால் மக்களின் இயல்பு நிலை பாதிக்கப்பட்டுஇடம்பெயர்ந்து இடைத்தங்கல் முகாம் மற்றும் உறவினர்களின் வீடுகளில் வாழ்ந்து வருகின்றனர். இவ் அசாதாரன சூழ்நிலையை பயன்படுத்திதிருட்டுசம்பங்கள் இடம்பெற்று வருகின்றன.





# வவுனியாவில் யானை தாக்கி கடற்படை அதிகாரி உயிரிழப்பு

வவுனியாவில் கடற்படை லெப்டினன்ட் தர அதிகாரி ஒருவர் காட்டு யானை தாக்குதலால் மரணமடைந்துள்ளார் என பூனாவ பொலிஸார் தெரிவித்தனர்.

பணி நிமித்தமாக கொழும்புக்கு சென்று விட்டு பஸ்ஸில் முகாமிற்கு திரும்பிய அதிகாரி வாகனத்தில் இருந்து இறங்கி முகாமிற்கு சென்று கொண்டிருந்த போது வெள்ளிக்கிழமை இரவு யானை தாக்கியதாக பொலிஸார் தெரிவித்தனர்.



பூனாவ கடற்படை முகாமில் கடமையாற்றிய மத்தலான, நிட்டம்புவவில் வசிக்கும்கடற்படை வீரரானலெப்டினண்ட் தர அதிகாரியே யானைதாக்கியதில் உயிரிழந்துள்ளார்.

யானை தாக்கியதில் பலத்த காயம் அடைந்த அவரை, கடற்படையினர் மற்றும் உள்ளூர் மக்களும் இணைந்து வவுனியா மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

பலத்த காயமடைந்த அதிகாரி வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போது உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த உத்தியோகத்தரின் மரணம் தொடர்பான நீதிவான் விசாரணைகளின் பின்னர் பிரேத பரிசோதனை வவுனியா பொது வைத்தியசாலையில் நடத்தப்படவுள்ளது. பூனாவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(100)

காலைக்கதிர்
Kalaikkathir

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# இன்னும் அதிக முயற்சி தேவை

கடந்த சில வருடங்களாக இலங்கை எதிர்நோக்கி வரும் பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து, வெளிநாட்டு வேலைவாய்ப்பைத் தேடிக்கொண்டிருந்த பல இலங்கையர்கள் ஆள் கடத்தல்காரர்களால் பாதிக்கப்பட்டுள்ளனர். அந்த அவலத்தின் மிக அண்மைய உதாரணமாக யாழ்ப்பாணத்தின் குருநகர் முல்லைத்தீவு இளைஞர்கள் ஆள் கடத்தல்காரர்களால் ஏமாற்றப்பட்டு ரஷ்ய இராணுவத்தில் சேர்க்கப்பட்ட நிகழ்வு அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது. பொருளாதார நலன்தேடும் இலங்கையர்களை ஏமாற்றும் ஆள்கடத்தல்காரர்களின் இந்தப் போக்கு தொடர்கிறது என்பதற்கு இதுவே மிகச் சிறந்த சான்று. இது தொடர்பில் ஆளும்தரப்பு மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தையும், இப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் அரசாங்கத்தின் வலுவானநடவடிக்கைஎடுக்கவேண்டியதன்அவசியத்தையும் இது தெளிவாகக் காட்டுகிறது.

மனித கடத்தல் என்பது உலகம் முழுவதும் நடந்துவரும் பரவலான ஒரு குற்றம், இது ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளைத் தனது லாபத்திற்காக பயன்படுத்துகிறது. ஈழத் தமிழர்கள் கடந்த 30 வருடங்களுக்கும் மேலாக இந்த மனிதக் கடத்தல் குற்றத்தால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அதுவொரு அரசியல், பொருளாதார வாய்க்கைக்கான வாய்ப்பு என்று இயல்பாக ஏற்றுக்கொள்ளுமளவிற்கு இந்த ஆள்கடத்தல் அவர்களைப் பின்னிப் பிணைத்துள்ளது. இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள குற்றவியல் வலையமைப்புக்கள் பல்வேறு அதிகார வரம்புகளில் செயல்படுகின்றன, சட்டக்கட்டமைப்பில்உள்ளஇடைவெளிகள் மற்றும்வேறுபாடுகளை இவை பயன்படுத்திக்கொள்கின்றன. எனவே சட்ட அமலாக்கப் பதில்களை வலுப்படுத்தவும், அத்தகைய கடத்தல் முயற்சிகளின் தாக்கத்தைக் குறைக்கவும் சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் விழிப்புணர்வை உருவாக்குவது இன்றியமையாததாகும்.

எந்த ஒரு அரசும் தாங்களாகவே செய்யக்கூடிய பணி இது. படைகளில் சேர்வதன் மூலம், நாடுகள் வளங்களைத் திரட்டலாம், முக்கிய நுண்ணறிவைப் பகிர்ந்து கொள்ளலாம் மற்றும் தங்கள் முயற்சிகளை மிகவும் திறம்பட ஒருங்கிணைக்கலாம். இருப்பினும், மனித கடத்தல் அபாயத்தைக் குறைக்கும் வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்துவது மிகவும் செலவு குறைந்த வழிகளில் ஒன்றாகும்.

நேற்று, மியான்மரில் உள்ள 'சைபர் கிரைம் முகாம்களுக்கு' இலங்கையர்கள் தொடர்ந்தும் கடத்தப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருவது குறித்து அண்மையில் தேசிய மனித கடத்தல் தடுப்பு பணிக்குழு (*NAHTTF*) எச்சரிக்கை விடுத்திருந்தது. அதன் பின்னர் யாழ்ப்பாண இளைஞர்கள் கடத்தப்பட்டு ரஷ்ய இராணுவத்திற்கு விற்கப்பட்டது குறித்த செய்திகள் இது தொடர்பான மேலும் அதிர்வுகளை ஏற்படுத்தியுள்ளன. ஆனால், இவற்றின் எதிர்வினைகளை ஆளும்தரப்பு ஆற்றத் தொடங்கியிருப்பதற்கான அறிகுறிகள் எவற்றையும் காணமுடியவில்லை.

ஆளும்தரப்பு இன்னும் அதிகமாகச் செய்யவேண்டும். அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் 2024 ஆம் ஆண்டு ஆட்கடத்தல் தொடர்பான தனது அறிக்கையில், இலங்கை ஆளும்தரப்பு ஆட்கடத்தலை ஒழிப்பதற்கான குறைந்தபட்ச தரங்களை முழுமையாக பூர்த்தி செய்யவில்லை என்று தெரிவித்திருந்தது. ஆனால் அவ்வாறு செய்வதற்கு குறிப்பிடத்தக்க முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகக் குறிப்பிடுகிறது. அது இன்னும் விரைவுபடுத்தப்படவேண்டும். ஆளும்தரப்பு அதில் கூடுதல் கவனம் எடுக்கவேண்டும். அதேவேளை, ரஷ்ய இராணுவத்திற்காகக் கடத்தப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களை விடுவிப்பதற்கும் தேவையான முழு –முயற்சிகளையும் எடுக்கவேண்டும்.

# தகுதியான தலைவர்களைத் தேர்ந்தெடுங்கள்

**விழுர்த்தானந்தா**

காய்கறி முற்றி இருக்கிறதா? பழம் கனிந்திருக்கிறதா? என்று பார்க்கத் தெரிந்த மக்களுக்கு - கவர்ச்சியான உடைகளைத் தேர்ந்தெடுக்கத் தெரிந்த இளைஞனுக்கு- எல்லாவற்றிலும் நான் பெஸ்ட் பொருளையே தேர்ந்தெடுப்பேன் என்று கூறும் பலரும், ஒன்றில் பெரிதாக கவனம் செலுத்தாமல் கோட்டை விடுவதைப் பார்க்கிறோம். அதுதான் நல்ல, தகுதியான தலைவர்களைத் தேடுவதில்லை. உலகில் எதற்குப் பஞ்சம் உள்ளது என்றால் பெட்ரோலுக்கோ, அரிசிக்கோ அல்ல. மனிதர்கள் மத்தியில் பரஸ்பரநம்பிக்கைக்கும் தலைமைப்பண்புகளுக்கும்தான் இன்று கடும்பஞ்சம் நிலவுகிறது. இந்தப் பஞ்சத்தைப் போக்கி உலகினை மேம்படுத்துவதற்காக ஆழமாகச் சிந்தித்தவர் சுவாமி விவேகானந்தர். நம்மைப் போன்றவர்களையும் சிந்திக்க வைப்பவர் அவர்.

தீமைகள் மட்டுமே உள்ளன என்பது சில சுயநலம் மிக்க அறிவுஜீவிகளின், அவசரமாக உள்ள சீர்திருத்தவாதிகளின் செயல், சிந்தனை, பேச்சு, நம்பிக்கை ஆகும். சமுதாயத்தைப் பற்றிய எதிர்மறையான விமர்சனத்தை இவர்களது வாழ்க்கையாக்கிக் கொண்டார்கள். இப்படிப்பட்ட அறிவுஜீவிகள் 'அந்த நாட்டைப் பாருங்கள். கவர்ந்திழுக்கும் இந்தக் கலாசாரத்தைக் கவனியுங்கள்" என்றெல்லாம் பேசுகிறார்கள். நல்லவனாக இருப்பதும் நன்மை செய்வதும் முட்டாள்தனம் என்று திரும்பத் திரும்ப இவர்கள் பலவிதங்களிலும் கூறிவருகிறார்கள். பலரையும் நம்ப வைக்கிறார்கள். பாரம்பரியச் சிறப்பையும் உண்மையான மேன்மையையும் அறிய மறுக்கும் இந்த அறிவுஜீவிகளின் சொற்படிப் பலரும் நடக்கிறார்கள். விளைவு? மக்கள் உண்மையான கலாச்சாரத்தில், பண்பாட்டில், தெய்விகத்தில் நம்பிக்கை இழந்து வருகிறார்கள். இந்த நம்பிக்கை இழப்பே நன்மை செய்வதில் நம்பிக்கை இல்லாதவர்களாக, வீரியமற்றவர்களாக அவர்களை ஆக்குகிறது.

இந்தச் சூழ்நிலையில் சீர்திருத்தத்திற்கான சரியான வழிகாட்டுதல் உண்டா? நிகழ்கால, எதிர்கால, நன்மை - தீமை விளைவுகள் பற்றிய அக்கறையுடனான தெளிவான சிந்தனை இல்லாமல் செய்யும் அனைத்துச் சீர்திருத்தங்களும் முடிவில் என்ன ஆகின்றன?

இவை போன்ற கேள்விகளுக்கு விடையாக சுவாமி விவேகானந்தர் சென்னையில் நூறு வருடங்களுக்கு முன்பு உதாரணத்துடன் விளக்கினார்.

"தீமைக்கு எதிரான வேலையைப் பற்றிய முதல் கருத்து இதுதான். அது நம்மை மேலும் மேலும் அமைதியானவர்களாக்க வேண்டும். வெறியை நம்மிடமிருந்து அகற்ற வேண்டும். தீவிர வெறியுடன் செய்யப்பட்ட சீர்திருத்தங்கள் எல்லாம் தங்கள் தோல்வியைத் தாங்களாகவே தேடிக் கொண்டன என்பதை உலக வரலாறு நமக்குக் காட்டுகிறது".

"உரிமையையும் சுதந்திரத்தையும் நிலைநாட்ட நடைபெற்ற புரட்சிகளுள், 1861-63- இல் நடந்த அமெரிக்காவின் அடிமைமுறைஒழிப்புப்போரைவிடப் பெரிய ஒன்றைக் கற்பனை செய்துகூடக் காண முடியாது. ஆனால் அதன் விளைவு என்ன?"

'இன்று அந்த அடிமைகள், அடிமை முறையை ஒழிப்ப தற்கு முன்பு இருந்ததைவிட நூறு மடங்கு மோசமான நிலையில் உள்ளனர்... அவர்களது உயிருக்கு மதிப்பே இல்லை. ஏதேதோ காரணம் காட்டி அவர்கள் உயிருடன் எரிக்கப்படுகிறார்கள். அவர்களைச் சுட்டுக் கொல்கிற கொலைகாரர்களைத் தண்டிக்க எந்தச் சட்டமும் இல்லை. ஏனென்றால் அவர்கள் கறுப்பினத்தவர்கள், அவர்கள் மனிதர்களல்ல, ஏன் மிருகங்கள்கூட அல்ல!"

''சட்டத்தினாலோ, தீவிரவாதத்தாலோ, பலாத்காரமாகத் தீமையை நீக்க முற்பட்டால் விளைவு இதுதான். நல்லது செய்வதற்காகவே ஆனாலும் தீவிர வெறியுடன் செயல்பட்ட ஒவ்வோர் இயக்கத்தையும் வரலாறு இவ்வாறே நமக்கு இனம் காட்டுகிறது. என் அனுபவமும் அதுவே" (கொழும்பு முதல் அல்மோரா வரை- 201).

தீவிர வெறியுடன் பிரச்சினைகளைத் தீர்க்க முயல்வது துருப்பிடித்த கத்தியால் தம் கட்டியைக் களைவதற்குச் சமம். தீமை வேறு; தீயவர் வேறு. தீமைகளை எதிர்க்கும்போது பெரும்பாலும் தீயவர்களை முற்றிலும் ஒழித்துவிட நினைத்துச் செயல்படுகிறார்கள். தலைவலி வந்தால் தலையை எடுப்பதற்குச் சமம் இது. அப்படி ஒழித்தால் தீமை குடிகொண்டிருந்த மனிதன் ஒழிக்கப்படுகிறான்; ஆனால் தீமை தப்பிவிடுகிறது. ''பாவியை வெறுக்காதே; பாவத்தை வெறுக்கக் கற்றுக் கொள்" என்பது விவேகானந்த சூத்திரம்.

சுவாமிஜியின் சிந்தனைத் தாக்கத்தினால் மார்ட்டின் லூதர் கிங் என்ற அமெரிக்க கருப்பினத் தலைவரும் தம்மை அறியாமலே ஈர்க்கப்பட்டார் எனலாம். அவர் கருப்பின மக்களின் உரிமைக்காகத் தீவிரமாகப் போரிட்டாலும் அவரிடம் தீவிரவாத, மதவெறி போன்ற உணர்ச்சிகள் இல்லாதிருந்தது சிறப்பம்சமாகும்.

மார்ட்டின் லூதர் கிங் போராட்டக் களத்திற்கு வருவதற்கு சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பு கறுப்பின மக்களுக்காகத் தீவிரமாகச் சிலர் போராடித் தோல்வியுற்றுக் களைத்திருந்தார்கள். அந்தப் போராட்டங்களுக்கான விதைகள் வெள்ளையர்கள் மீதிருந்த வெறியினால் வெந்திருந்ததால் அங்கு சுதந்திரம் என்னும் செடி முளைக்கவில்லை. ஆனால் கிங்கிற்குத் தார்மீகப் பலத்தோடு தெய்வ பக்தியும் இருந்தது. அவர் அடிமை முறையைக் கொள்கை வெறியுடன் எதிர்க்காது கொள்கை வீரியத்துடன் களையப் பாடுபட்டார். அவ்வாறு செயல்பட்டுச் சுதந்திரம் பெற்றால்தான் அது நிலைத்திருக்கும் என்றும் அவர் பிரச்சாரம் செய்தார்.

'வெள்ளை அமெரிக்கர்கள் கறுப்பர்களாகிய நம்மை மதிக்கும்படி நாம் ஏன் முன்னேற முடியாது?' என்பது போன்ற கேள்விக்கணைகளை அவர் மக்களிடம் ஏவினார். நெஞ்சங்களில் நன்மையைத் தூவினார். நன்மையின் சக்தியில் நம்பிக்கையைத் தூண்டினார். மக்கள் மெல்லமெல்லத் தயாரானார்கள். நிற வேற்றுமை வெறியை அடக்க வெறியோடல்ல, வீரியத்துடன் கிங் போராடினார். 'அமெரிக்க காந்தி' என்று புகழடைந்த கிங் நடத்திய நிறவேற்றுமை எதிர்ப்புப் பேரணியில் சுமார் ஒரு லட்சம் பேர் கலந்து கொண்டது சரித்திரப் பிரசித்தி! அவ்வளவு கூட்டத்திலும் அடாவடித்தனங்கள் எதுவும் நடக்காமலிருந்தது வித்தையல்லவா! நன்மையின் சக்தி புரிந்த அற்புதம் இது.

1957- இல் கிங் ஆயிரக்கணக்கான மைல்கள் நடந்தார். 208 சொற்பொழிவுகள் செய்து மக்கள் சக்தியைத் திரட்டினார் என்கிறது அமெரிக்க 'ஜெட்' பத்திரிகை. முடிவில் கறுப்பின மக்கள் தலைநிமிர்ந்தார்கள். கிங் பெற்ற வெற்றி சத்தியத்தின் வெற்றி. தம் வெற்றிக்குக் காரணமாக அவர் கூறியது என்ன? தமது இயக்கத்திற்கு 'ஏசுநாதர் ஆற்றலை அளித்தார், காந்திஜி வழிமுறை வகுத்தார்' என்றார்.

இந்திய சுதந்திரப் போராட்டத்தின்போது, "இந்தியாவிற்குச் சுதந்திரம் வாங்குவது இருக்கட்டும். ஆனால் பெற்ற சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கான மக்கள் எங்கே?'' என சுவாமி விவேகானந்தர் கேட்டார். அந்தச் சிந்தனையின் தொடர்ச்சியாக காந்திஜியும், ''சுதந்திரம் பெற முதலில் மக்கள் தயாராக வேண்டும்'' என்றார்.

மக்களின்தகுதிக்குஏற்பத்தான் அவர்களிடமிருந்து ஒருவன் தான் தலைவனாக முடியும். ஆதலால் தலைவர்களை உருவாக்குவதில் தனிமனித மற்றும் சமுதாயத்தின் பங்கும் பெருமளவில் உள்ளது என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

காந்திஜிதம்போராட்டத்தின் ஒரு முக்கிய அம்சமாக அடிக்கடி உண்ணாநோன்பு மேற்கொண்டார். உண்ணாநோன்பினால் காந்திஜி, ஆங்கிலேயர்களை ஒழித்தே தீர வேண்டும் என்ற நம் மக்களின் தீவிரவாத வெறியை, கொள்கை வீரியமாக மாற்றிக் கொண்டிருந்தார். மக்கள் நாட்டுக்கும் மக்களுக்கும் சேவை செய்ய வேண்டும்; நாம் வாழ்வதற்கு இடம் அளித்துள்ள நாட்டைப் பற்றிய பெருமைகளை அறிந்து கொள்ள வேண்டும் என்பன போன்ற விஷயங்களைக் கூறி வெறியை வீரியமாக மாற்றிக் கொண்டிருந்தார்.

மகாத்மா காந்தி, "சுவாமி விவேகானந்தரின் கருத்துகளை நான் ஆழமாகப் படித்துள்ளேன். அவரது நூல்களைப் படித்த பிறகு என் தாய் நாட்டின் மீது அன்பு ஆயிரம் மடங்காகப் பெருகியது" என்றார். இதனால் காந்திஜிக்குச் சுதந்திரப் போராட்டத்திற்கான கூடுதல் சக்தி விவேகானந்தர் மூலமாகக் கிடைத்ததை உணரலாம்.

சுவாமி விவேகானந்தர் கூறுகிறார்: ''நம் இயல்பிற்கு ஏற்பவே நாம் வளர வேண்டும். வெளிநாட்டுச் சங்கங்கள் நம்மீது திணித்துள்ள செயல் முறைகளைப் பின்பற்ற முயல்வது வீண். அவ்வாறு நடக்கவும் முடியாது. அப்படிச் செய்யாதது தெய்வாதீனமாக அமைந்துவிட்டது. கடவுளுக்கு நன்றி. வளைத்து நீட்டி, கொடுமைப்படுத்துவதன் மூலம் நம்மைப் பிற நாடுகளின் அமைப்பில் உருவாக்க முடியாது. மற்ற இனங்களின் சமூக அமைப்புகளை நான் நிந்திக்கவில்லை; அவை 'தங்கள் பல்வேறு அறிவியல் அமைப்புகள், மரபுகளின் பின்னணியில் தற்போதைய அமைப்பு முறையை அவர்கள் பெற்றுள்ளார்கள். நம் பாரம்பரியத்திற்கு ஏற்ப, ஆயிரக்கணக்கான ஆண்டுகளின் செயல்களின் பின்னணியில் அமைந்த, நமக்குச் சொந்தமான முறையில்தான் நாம் இயல்பாகச் செல்ல முடியும். நம் சொந்தப் பாதையில்தான் சுலபமாகச் செல்ல முடியும். அதை நாம் செய்தாக வேண்டும்." (கொழும்பு முதல் அல்மோரா வரை, பக் 210 ).

இவ்வாறு சிந்தனைகளாலும் செயல்களாலும் நம்மை வளரச் செய்து, நமக்கு தெய்வீக பலத்தைப் பெற்றுத் தரும் ஆச்சாரியர்களே, தலைவர்களே இப்போது மட்டுமல்ல, எப்போதும் நமக்குத் தேவை. "நீயும் முன்னேறி, பிறரையும் முன்னேற்று" என்பது சுவாமி விவேகானந்தர் ஏற்படுத்திய செயல்முறை பாதை.

## வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட கொற்றாண்டார் குளம் வீதி சீரமைப்பு



கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ள அனர்த்தத்தினால்பெரிதும்பாதிக்கப்படும்அபாயத்திலிருந்த கொற்றாண்டார்குளம்வீதி(மருதங்கேணிபளைசுனாமி அபாய வெளியேற்றபாதை) புனரமைக்கப்பட்டது.

இதன்மூலம் பெரும் சேதத்துக்கு உள்ளாகவிருந்த நிலையில் குறித்த பாதையின் இரு பக்கமும் மண் மூடைகள் அடுக்கப்பட்டு குறித்த வீதி சீரமைக்கப்பட்டுள்ளது.



கிளிநொச்சிமாவட்ட உள்ளூராட்சிதிணைக்களம், பளைபிரதேசசபை மற்றும் பலாலி பாதுகாப்பு படை தரப்பினர் அடங்கிய குழுவினரின் ஒத்துழைப்புடன் குறித்த வீதி இவ்வாறு சீரமைக்கப்பட்டது.

அனர்த்த காலத்தில் இச் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்த உள்ளூராட்சி திணைக்களம், பளை பிரதேச சபை மற்றும் பலாலி பாதுகாப்பு படை தரப்பினரினருக்கு மாவட்ட செயலகம் மற்றும் மாவட்ட மக்கள் சார்பில் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம். (113)

## மதரசா மாணவர்களின் இல்லங்களுக்கு மாவட்ட செயலர் நேரில்சென்று அனுதாபம்

(சர்ஜுன் லாபீர்)

மாவடிப்பள்ளியில் வெள்ளத்தில் உயிரிழந்த சம்மாந்துறையைச் சேர்ந்த மதராசா மாணவர்களின் வீடுகளுக்கு நேரடியாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்திக அபேவிக்ரம நேற்று (சனிக்கிழமை) வீடுகளுக்கு சென்று அனுதாபங்களை தெரிவித்தார்.









சம்மாந்துறை பிரதேசசெயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனீபாவின் அழைப்பின்பேரில் வருகை தந்த மாவட்ட அரசாங்க அதிபர் உயிரிழந்த மாணவர்கள் ஒவ்வொருவருடைய வீடுகளுக்கும் சென்றுகுடும்பஉறுப்பினர்களை சந்தித்து தனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்து இருந்தார்.

இந் நிகழ்வில் அம்பாறை மாவட்ட பிரதம கணக்காளர் ஏ.எல்.மஹ்ரூப் ,அம்பாறை மாவட்ட செயலககணக்காளர் ஐ.எம் பாரீஸ், சம்மாந்துறை உதவிப் பிரதேச செயலாளர் யூ.எம் அஸ்லம், சம்மாந்துறை பிரதேச செயலக கணக்காளர் எஸ்.எல் சர்தார் மிர்ஸா, நிதி உதவியாளர் ஏ.எம்.நவாஸ் உட்பட அரசஉயர் அதிகாரிகள் கிராம சேவகர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.



# நிந்தவூர் மத்ரஸா மாணவன் ஜனாஸா மக்கள் அஞ்சலியுடன் நல்லடக்கம்



(நூருல் ஹுதா உமர்)

ஐந்து நாள்களுக்கு பின்னர் நேற்று (சனிக்கிழமை) காலை கண்டெடுக்கப்பட்ட நிந்தவூர் மத்ரஸா மாணவன் கலீல் தஷ்ரீகின் ஜனாஸா சம்மாந்துறை தாறுஸ்ஸலாம் மகா வித்தியாலயம் மைதானத்தில் பெருந்திரளானமக்கள்வெள்ளத்தின்பிரசன்னத்துடன் ஜனாஸா தொழுகை நடத்தப்பட்டு சம்மாந்துறை முஅல்லா மஹல்லாவில் பெரும் திரளான மக்கள் மத்தியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

காரைதீவு - மாவடிப்பள்ளி பகுதியில் உழவு இயந்திரத்தில் வீடு திரும்பிக்கொண்டிருந்த மதரஸா மாணவர்கள் உள்ளிட்ட பலர் வெள்ளத்தில் சிக்கி காணாமல் போயிருந்த நிலையில் அன்றைய தினம் மாலை மீட்புப் படையினரின் தேடுதல் நடவடிக்கையின் போது 5 மாணவர்கள் வெள்ளத்தில் இருந்து காப்பாற்றப்பட்டனர். இந்த மீட்பு பணியில் பாதுகாப்பு படையினரும், மாளிகைக்காடு ஜனாஸா நலன்புரி அமைப்பும் முழுமையாக ஈடுபட்டு வந்ததுடன் அவர்களுக்கு உதவியாக சாய்ந்தமருது ஜனாஸா நலன்புரி மக்கள் பேரவை மற்றும் காரைதீவு இளைஞர்கள் அமைப்பினரும் ஈடுபட்டிருந்தனர்.

வெள்ளம் தணிந்திருந்த போதிலும் மீட்புப் படையினரின் தேடுதல் நடவடிக்கை தொடர்ந்து ஐந்தாவது நாளாக இடம்பெற்று வந்தது. அதன்போது இதுவரை மொத்தமாக 08 ஜனாஸாக்கள்மீட்புப்பணியாளர்களால்மீட்கப்பட்டு சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அதில் நிந்தவூர் காஷிபுல் உலூம் அரபுக் கல்லூரி மாணவர்களின் 06 ஜனாஸாவும், வாகன சாரதியின் ஜனாஸாவும், இன்னும் ஓர் இளைஞரின் ஜனாஸாவுமாக மொத்தம் 08 ஜனாஸாக்கள் மீட்கப்பட்டன. மீட்பு பணியாளர்களால் வெள்ளத்தில் காணாமல் போனவர்களை தொடர்ந்து தேடும் நடவடிக்கை



இடம் பெற்று வந்த நிலையில் நேற்று காலை இறுதியாக ஒரு ஜனாஸா கண்டெடுக்கப்பட்ருந்தது அதுவே நிந்தவூர் மதரஸா மாணவன் மௌலவி கலீல் தஷ்ரீப் அவர்களின் ஜனாஸா ஆகும்.

மத்ரஸா முடிந்து மாணவர்களும் உழவு இயந்திர சாரதி மற்றும் உதவியாளரும் பயணித்துக்கொண்டிருந்த தருணத்தில் உழவு இயந்திரம் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு இந்த விபத்து நடைபெற்றுள்ளது. மீட்பு பணியின் போது விலை உயர்ந்த மோட்டார் சைக்கிள்கள் இரண்டும், உழவு இயந்திரமும் மீட்கப்பட்டதுடன், இதில் பயணித்தவர்கள் எத்தனை பேர், எத்தனை பேர் காணாமல் போனார்கள் என்பதை துல்லியமாக கூற முடியாத நிலை இருந்த நிலையில் இந்த சடலங்கள் மீட்கப்பட்டு வருகிறது. திடீர் மரண விசாரணை அதிகாரி அப்துல் ஹமீட் அல் ஜவாஹீர் மரண விசாரணைகளை மேற்கொண்டதுடன் பிரேத பரிசோதனைகள் முடிக்கப்பட்டு குடும்பத்தினிடம் ஜனாஸாக்கள் கையளிக்கப்பட்டிருந்தது.



காலைக்கதிர் Kalaikkathir

## மீன்பிடித்துறை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமது கோரிக்கை என்றும் எடுத்துரைத்தனர். இவற்றை செய்து தந்தாலேபோதும் மற்ற விடயங்களை நாங்களே பார்த்துக் கொள்வோம் - என்றனர்.

மீனவர்களது கோரிக்கையினை செவிமடுத்த மீன்பிடித்துறை அமைச்சர் முன்னைய ஆட்சிக் காலத்தைப்போலல்லாது கடற்படையினர் ஊடாக இந்திய மீனவர்களது வருகையைத் தடுத்த நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதிமொழியினை வழங்கியிருந்தார்.

தொடர்ந்து சீரற்ற காலநிலை காரணமாக அப்பகுதியில் மழைவெள்ள பாதிப்பிற்குள்ளான வீடுகளை நேரில் சென்று பார்வையிட்டுச் சென்றிருந்தார்.

## அரச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயற்பாடுகளை தற்போதைய ஆளும்தரப்பு ஆயுர்வேத திணைக்களத்திலிருந்து ஆரம்பித்துள்ளதா? எனவும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

இவ்வாறான நியமனங்கள் ஊடாக அரச ஆயுர்வேத சேவை உள்ளடக்கிய அரச சேவையைக் கேள்விக்குறியாக்க வேண்டாம் என ஆளும்தரப்பிடம் கோருவதாகவும் ஆயுர்வேத மருத்துவ அதிகாரிகளின் ஒன்றிணைந்த அமைப்பின் தலைவர் வைத்தியர் விமுக்தி டி சொய்ஸா குறிப்பிட்டுள்ளார்.

## இடரினால் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடர்களால் ஒரு இலட்சத்து 38 ஆயிரத்து 944 குடும்பங்களைச் சேர்ந்த 4 இலட்சத்து 65 ஆயிரத்து 746 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

சீரற்ற வானிலையால் ஏற்பட்ட இடரில் சிக்கி இதுவரை 19 பேர் காயம டைந்துள்ளனர். இந்த அனர்த்தத்தில் 98 வீடுகள் முழுமையாகவும் 2,333 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

நாடளாவிய ரீதியில் 245 இடைத்தங்கல் முகாம்கள் அமைக்கப்பட்டுள்ள நிலையில், 8 ஆயிரத்து 984 குடும்பங்களைச் சேர்ந்த 29 ஆயிரத்து 596 பேர் இடைத்தங்கல் முகாம்களிலும் உறவினர்கள் வீடுகளிலும் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

# காரைதீவில் வெள்ளம் அடித்துச்சென்ற 8 பேரினது சடலங்களும் மீட்பு

அம்பாறை காரைதீவு மாவடிப்பள்ளி பகுதியில் உழவு இயந்திரம் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு காணாமல் போனவர்களில் இதுவரை 08 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

உழவு இயந்திரத்தில் வீடு திரும்பிக் கொண்டிருந்த மதரஸா மாணவர்கள் உள்ளிட்ட சிலர் வெள்ளத்தில் சிக்கி காணாமல் போகியிருந்த நிலையில் மீட்புப் படையினரின் தேடுதல் நடவடிக்கையின்போது 5 மாணவர்கள் வெள்ளத்தில் இருந்து காப்பாற்றப்பட்டனர்.

மீட்புப் படையினரின் தேடுதல் நடவடிக்கை தொடர்ந்து ஐந்தாவது நாளாக இடம்பெற்று வந்தது.

அதன்போது இதுவரை மொத்தமாக 08 பேரின் சடலங்கள் மீட்புப்பணியாளர்களால் மீட்கப்பட்டு சம்மாந்துறை ஆதார வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அதில் நிந்தவூர் காஷிபுல் உலூம் அரபுக் கல்லூரி மாணவர்களின் 06 சடலங்களும், சாரதியின் சடலமும், மற்றுமொரு இளைஞரின் சடலமுமாக மொத்தம் 08 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டன.

மீட்பு பணியாளர்களால் வெள்ளத்தில் காணாமல் போனவர்களை தொடர்ந்து தேடும் நடவடிக்கை இடம்பெற்று வந்த நிலையில் நேற்று (சனிக்கிழமை) காலை இறுதியாக ஒரு சடலங்கள் மீட்கப்பட்டது.

மத்ரஸா முடிந்து மாணவர்களும் உழவு இயந்திர சாரதி மற்றும் உதவியாளரும் பயணித்துக்கொண்டிருந்த தருணத்தில் உழவு இயந்திரம் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு இந்த விபத்து இடம்பெற்றது.

மீட்புபணியின்போது விலையுயர்ந்த மோட்டார் சைக்கிள்கள் இரண்டும், உழவு இயந்திரமும் மீட்கப்பட்டதுடன், இதில் பயணித்தவர்கள் எத்தனை பேர், காணாமல் போனார்கள் என்பதை துல்லியமாக கூற முடியாத நிலையில் இந்த சடலங்கள் மீட்கப்பட்டன.

திடீர் மரண விசாரணை அதிகாரி மரண விசாரணைகளை மேற்கொண்டதுடன் பிரேத பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டு வருகின்றன.

# தம்பலகாமம் பாலம் போட்டாறு கிராமத்துக்கு அமைச்சர்கள் குழுவினர் கண்காணிப்பு விஜயம்!

திருகோணமலை மாவட்ட தம்பலகாமம் பிரதேச செயலக பகுதிக்குட்பட்ட பாலம்போட்டாறு தி/விநாயகர் தமிழ் வித்தியாலயத்தில் சீரற்ற காலநிலை காரணமாக பாதிக்கப்பட்டு இடைதங்கல் முகாமில் உள்ள மக்களை வெள்ளிக்கிழமை அமைச்சர்கள் கொண்ட குழுவினர் கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்கள்.

அனர்த்த கிராமிய மட்ட முன்னெடுப்புக்கள், நீர் வடிந்தோடக்கூடிய வழிவகைகள் தொடர்பிலும் இடைத் தங்கல் நிலையத்தில் தங்கியிருந்த பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகள் தொடர்பிலும் இதன் போது கேட்டறிந்து கொண்டனர்.

குறித்த அமைச்சர் குழுவில் கிராமிய அபிவிருத்தி சமூக பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி அமைச்சர் கலாநிதி உப்பாலி பண்ணலகே, வலுசக்தி அமைச்சர் பொறியியலாளர் குமார ஜயகொடி, காணி மற்றும் நீர்ப்பாசன பிரதி அமைச்சர் கலாநிதி சுசில் ரணசிங்க, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் கலாநிதி பிரசன்ன குமார குணசேன ஆகியோர்கள் இடம் பெற்றிருந்தனர்.மேலும் தம்பலகாமம் பிரதேச செயலக சமுர்த்தி தலைமை முகாமையாளர் ஏ.ஆர் சித்திக், பாலம்போட்டாறு கிராம சேவகர் பிரிவின் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் தங்கரூபன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# புத்தளம் மாவட்ட இலக்கிய விழாவில் பாத்திமா பெண்கள் பாடசாலை 6 மாணவிகள் முதலிடம்



(சியாஜ்)

புத்தளம் மாவட்ட இலக்கிய விழா போட்டியில் புத்தளம் பாத்திமா பெண்கள் மகா வித்தியாலய 06 மாணவிகள் பல்வேறு துறைகளில் வெற்றி பெற்றுள்ளதுடன் இம் மாணவிகளுக்கான பரிசளிப்பு வைபவம் கடந்த வெள்ளிக்கிழமை ஆனமடுவ சுதம்பாய நகர மண்டபத்தில் புத்தளம் மாவட்ட செயலாளர் எச்.எம் எஸ் பீ ஹேரத் தலைமையில் நடைபெற்றது.

புத்தளம் மாவட்டத்தில் முதலிடம் பெற்று சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப்பட்ட பாத்திமா பெண்கள் மகா வித்தியாலய பாடசாலை மாணவிகள்

1. சிறுகதை ஆக்கம் (ஆங்கிலம்) எம்.ஐ ஹம்தா
2. கவிதை ஆக்கம் (ஆங்கிலம்) ஆர். தனா தன்யா
3. கவிதை கூறல் (ஆங்கிலம்) எம்.என் எப் சீஸா
4. கவிதை கூறல் (ஆங்கிலம்) எம்.ஆர் றொஸ்மின் றபா
5. கவிதை ஆக்கம் ( தமிழ் ) எம்.என் மர்யம் ஹிலா
6. பாடல் நயத்தல் ( தமிழ் ) எம்.எஸ்.எப் சப்காத்

ஆகியோருக்கு பாடசாலை நிர்வாகம் சார்பாக தமது வாழ்த்துக்களை அதிபர் தெரிவித்துள்ளார்.









காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

# நாடாளுமன்றத்திற்கு அபகீர்த்தி ஏற்படுத்தி கடத்தல்களிலீடுபடும் எம்.பிக்களை நீக்கும்வகையில் நாடாளுமன்றில் சட்டம் இயற்றுக

## சபாநாயகரிடம் உதுமாலெப்பை கோரிக்கை

(ஹமீட்)

மக்களின் ஆணையைப் பெற்று நாடாளுமன்ற உறுப்பினர்களாக தெரிவு செய்யப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களில் சிலர் நமது நாட்டிற்கும், நமது நாடாளுமன்றத்திற்கும் அபகீர்த்தி ஏற்படுத்தி கடத்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர்.



இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு மாதம் சபை நடவடிக்கைகளில் கலந்து கொள்ளாமல் தடை விதிக்க முடிந்தது என நாடாளுமன்ற செயலாளர் தெரிவித்தார். மக்களின் ஆணையினைப் பெற்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடத்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டு நமது நாட்டிற்கும் நாடாளுமன்றத்திற்கும் அபகீர்த்தி ஏற்படுத்தும் உறுப்பினர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து நீக்குவதற்கான புதிய சட்ட மூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து தீர்மானத்தை மேற்கொள்ள நமது நாடாளுமன்றத்தின் சபாநாயகர் ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என பத்தாவது நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட 162 உறுப்பினர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட திசைமுகப்படுத்தல் செயலமர்வு நேற்று நாடாராளுமன்றத்தில் சபாநாயகர் கௌரவ கலாநிதி அசோக ரன்வல தலைமையில் நடைபெற்ற செயலமர்வில் உரையாற்றிய அம்பாறை மாவட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.உதுமாலெப்பை தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் -

நாடாளுமன்றத்தில் சட்டமூலம் கொண்டு வந்து கடத்தலில் ஈடுபடும் நாடாளுமன்ற உறுப்பினர்களை பதவிலிருந்து நீக்க முடியாத நிலைமை ஏற்படுமாயின் ஜனாதிபதியின் விசேட அதிகாரத்தை பயன்படுத்தி கடத்தலில் ஈடுபடும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு ஜனாதிபதியின் விசேட ஜனாதிபதி குழு ஒன்றை நியமிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# யானையின் சாவுக்குக் காரணமான மின்வேலி அமைத்தவருக்கு மறியல்

கல்கிரியாகம இங்குருவெள பிரதேசத்தில் நீண்ட தந்தங்கள் கொண்ட யானை மின்சாரம் தாக்கி கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட காப்புறுதி நிறுவனத்தின் பிரதான முகாமையாளரை எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கெக்கிராவ பதில் நீதிவான் கெமுனு திஸாநாயக்க வெள்ளிக்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

உயிரிழந்த யானையின் பிரேத பரிசோதனையை கால்நடை வைத்தியர் சந்தன ரணசிங்க மேற்கொண்டார் என பொலிஸார் தெரிவித்தனர்.

40 முதல் 50 வயது மதிக்கத்தக்க, 4 அடி 2 அங்குலம் உயரமுடைய தந்தங்கள் கொண்ட யானையே உயிரிழந்துள்ளது.

மின்சாரம் தாக்கியதால் இதயத்தில் ஏற்பட்ட பாதிப்பு காரணமாக யானைக்கு மரணம் நேரிட்டுள்ளதாக கால்நடை வைத்தியர் தெரிவித்தார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.12.2024இல் வெளியிடப்பெற்றது